# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17

இதழ் - 3

மார்ச் 2004



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701. இந்தியா

✆ : 04257 - 230030, 98427 - 30382

E-mail : kangayamcofc @ eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | சுவிசேஷத்தை தடைசெய்தல் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | வாலிபர் பகுதி | 17 |
| 5. | சிறுவர் பகுதி | 21 |
| 6. | சோதித்தறியுங்கள் | 23 |
| 7. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 25 |
| 8. | நான் நிற்கும் அஸ்திபாரம் கிறிஸ்து தான் ... | 30 |

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor** **S. Rajanayagam** — **Honorary Editor** **J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.17 February - 2004 Issue - 2


***நிறுவன ஆசிரியர் உரை***

## மந்திரியின் மனமாற்றம்

இம்மண்ணுலக மாந்தர்களை பாவத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்க வானத்திலிருந்து இறங்கிவந்த இயேசு பெருமான் சிலுவையின் மீது முழு வெற்றி கண்டு, இவ்வுலகை விட்டுக் கடந்துபோகுமுன், தம்முடைய சீடர்களுக்கு ஒரு மாபெரும் கட்டளையை இட்டுச்சென்றார். "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத் 28 : 29, 20)

இம்மாபெரும் கட்டளையை அவருடைய சீடர்களாகிய நாம் நிறைவேற்ற, நமக்கு மிகச் சிறந்த ஆதாரமாக இருப்பது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமே. ஏனெனில், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் இடம் பெற்றிருந்தாலும், "ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது எப்படி? என்பதை விளக்கும் ஒரே நூல் இதுதான். சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் வெளிப்படுத்தல் தவிர உள்ள மீதி 21 நூல்களும் "ஒருவன் கிறிஸ்தவனாக வாழ்வது எப்படி? என்பதையே பிரதானமாகக் கூறுகிறது.

இவ்வரிய நூலின் 8ஆம் அதிகாரத்தின் பிற்பகுதி (வ. 26 - 40) "ஒரு மந்திரியின் மனமாற்றத்தைக் குறித்து விவரித்துச் சொல்கிறது". இங்கே இடம் பெற்றுள்ள சம்பவத்தை சற்று விபர்மாகப் படித்தால் நமக்குப் பிரயோஜனமாக இருக்குமெனை நம்புகிறேன்.

நாம் பார்க்கப்போகும் மந்திரியின் பெயர் இங்கே இடம் பெறவில்லை. ஆனால், அவன் எத்தியோப்பியா தேசத்தின் மந்திரியாக, அதுவும் நிதிமந்திரியாக இருந்துள்ளான். வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள இந்த எத்தியோப்பியா, இன்றைய உலக வரைபடத்தில் உள்ள எத்தியோப்பியா அல்ல. இன்றுள்ள எத்தியோப்பியா, நமது இந்திய தேசத்தைக் காட்டிலும், பொருளாதாரத்தில் பின் தங்கி பஞ்சத்தாலே வாடிக் கொண்டிருக்கும் ஓர் ஏழை நாடு. ஆனால், அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நாடு, அன்றிருந்த உலகத்தில் குறிப்பிடத்தக்க நாடாகவும், செல்வச் செழிப்புள்ள நாடாகவும் இருந்ததென்று சரித்திரம் கூறுகிறது. அத்தேசத்தின் பட்டத்து ராணியின் பெயர் "கந்தாகே" இவன் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிருக்கும் தலைவனாயிருந்தான்" என்று வேதம் சொல்கிறது. (8 : 27) ஓர் அரசாங்கத்தில் மந்திரிகள் பலர் இருந்தாலும், நிதி மந்திரிதான் மிக முக்கிய புள்ளி. எந்த ஒரு அரசிலும் இரண்டாவது ஸ்தானம் இவர்களுக்கே சொந்தம். இன்னும் அதிபதி ஒரு பெண்ணாக இருந்தபடியால் இவனுடைய அதிகாரமும் செல்வாக்கும் நாம் நினைப்பதைக் காட்டிலும் அதிகமாகவே இருந்திருக்கும்.

பொதுவாகவே, பணக்காரர்களுக்கும், பக்திக்கும் சம்பந்தமிருக்காது. பணத்தோடு பதவியும் சேர்ந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். ஆனால் இந்த மந்திரியோ கொஞ்சம் வித்தியாசமானவனாக இருந்துள்ளான் என்றே தெரிகிறது. பணத்திற்குண்டான செருக்கோ, பதவிக்கான பகட்டோ இவனிடம் துளியும் இல்லாமல், நல்லவனாக, அசல் பக்திமானக இருந்துள்ளான். ஆம், தனது மார்க்க கடமைகளை நிறைவேற்ற, கிட்டதட்ட ஆயிரம் மைல்கள் பயணம் மேற்கொண்டுள்ளான். இவன் பிறப்பால் யூதனாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், யூதமார்க்கத்தமைந்தவனாக இருந்தாலும், நீண்ட தூரம் பயணித்து, எருசலேம் பட்டணம் வந்து, தன் காரியங்களை முடித்து இரதத்தில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

எந்த ஒரு மனிதனுடைய ஆத்துமாவும் கெட்டுப்போவது, தேவனுக்குப் பிரியமானதல்ல (II பேது. 3 : 9 அப். 17 : 30). அதிலும், குறிப்பாக அவர்மீது மெய்பக்தி காட்டுகிறவர்களின் ஆத்துமாக்களை அவர் அழிவுக்கு அனுமதிப்பதில்லை. புறஜாதியானாயிருந்த நூற்றுக்கதிபதியின் விஷயத்தில் நாம் இதை இன்னும் திட்டமாக அறியலாம். தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கிச் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த கொர்நெலியுவையும் அவனோடிருந்தவர்களையும் பேதுருவைக் கொண்டு இரட்சித்தார் (அப் 10-ம் அதி.).

இங்கே, ஒரு பக்தியுள்ள பாவியாக இருந்த மந்திரியை இரட்சிப்புக்குள் கொண்டுவர ஒரு திட்டம் தீட்டி, அதற்காக அவன் திரும்பி ஊர் செல்லும், வனாந்திர வழியைத் தேர்ந்தெடுத்தார்.

சுவிசேஷப் பிரசங்கியாகிய பிலிப்புவை நாமறிவோம். எருசலேமில் எதிர்ப்பு வலுத்தபோது, சமாரியாவிற்கு ஓடி வந்து கிறிஸ்துவைக் குறித்து கிறிஸ்துவின் நற்செய்திக்கு பிரசங்கித்தவர்தான் இந்த பிலிப்பு (8 : 4 5) ஊழியத்தை ஜாம் ஜாம் என்று நடத்தி அநேகரை ஞானஸ்நானத்திற்குள் வழி நடத்தினார் (8 : 12) வெற்றியுள்ள ஒரு ஊழியப் பயணத்தை மேற்கொண்டு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோதுதான். ஒரு வித்தியாசமான அழைப்பு காத்திருந்தது. கர்த்தருடைய தூதனால் காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்திர மார்க்கமாகப் போகப் பணிக்கப்பட்டார். அதே சமயம் எத்தியோப்பிய மந்திரியும் வேறு வழியாய் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

இந்த இரண்டு நெடுஞ்சாலைகளும் ஓரிடத்தில் சந்தித்துள்ளதாகவே தெரிகிறது. ஏனெனில், வெவ்வேறு பாதைகளில் பயணித்த இருவரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒருசேர வந்து சேர முடிந்தது. தேவன், தான் விரும்பும் திட்டத்தை எவ்வளவு கனகச்சிதமாக நிறைவேற்றுகிறார் பாருங்கள்.

பிலிப்புவிடம் பேசின தூதன் வனாந்திர மார்க்கமாய்ப் போ என்றார். அவன் எழுந்து போனான். (வ. 26) மறுவார்த்தை பேசவில்லை. எதற்காகப் போகச் சொல்லுகிறார் என்று தெரியாது. அவர் திட்டமிட்ட இடம் வந்தபொழுது, "ஆவியானவர்: நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்றார்... பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து கொண்டான். (வ.29, 30) தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஊர் பேர் தெரியாத இடத்திற்குப் போகவும். முன்பின் தெரியாத ஆளிடம் பேசவும் தன்னை அவன் ஒப்புக் கொடுத்தான்.

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் நம்முடைய நிலை என்ன? அவருக்காகச் சேவை செய்ய அழைப்புக் கிடைக்கும்போது என்னவெல்லாம் கேட்கிறோம். எப்படியெல்லாம் விசாரிக்கிறோம். வாக்குறுதி வாயிலே தந்தால் போதாது, எழுத்தின் மூலம் இருந்தால் நல்லாயிருக்குமே என்றல்லவா எண்ணுகிறோம். ஆனால், வனாந்திர மார்க்கமாகப் போகப் பணிக்கப்பட்ட பிலிப்பு எதைப் பற்றியும் வாய் திறக்கவில்லையென்பதை கவனித்தீர்களா? ஏனெனில், தன்னை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்பதை உள்ளப்பூர்வமாக நம்பினான்.

சரி, பிலிப்பு ஓடிப்போய் இரதத்தைச் சேர்ந்தபோது அவன் ஏசாயா தீர்க்கனின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். "அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மை தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும்" என்பதே அப்பகுதி.

எத்தியோப்பிய மந்திரிக்கு ஏசாயா தீர்க்கன் யாரைப்பற்றி எழுதியிருக்கிறார் என்று தெரியவில்லை. இயேசு கிறிஸ்து யாரென்று அவனுக்கு மருந்துக்குக் கூடத் தெரியாது. "இரட்சிப்பின் திட்டம் என்றால் அது எந்தக் கடையில் கிடைக்கும் என்பதே அவன் நிலை ஆனாலும், இந்தப் "பக்தியுள்ள பாவி"யின் ஆத்துமா அழிந்துவிடக் கூடாது என்பதற்காக பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவை வழிநடத்தினார்.

அநேகருடைய தவறான உபதேசம் இந்த இடத்தில் வெளிக் கொணரப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். தேவனுக்குப் பயப்படுகிற ஒரு பாவியின் மீது பரிசுத்த ஆவியானவரின் கிரியை நேரிடையாக நடக்கிறது என பலர் நம்புகின்றனர், போதிக்கவும் கூட செய்கின்றனர். இது சரியென்றால், உண்மையாகவே தேவனுக்குப் பயப்படுகின்ற இந்த மந்திரியின்மீது இரங்கி பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்காமல், ஏன் பிலிப்புவின் மூலம் இவனைச் சந்திக்கிறார்? என்ன காரணம்? நமது சிந்திக்கும் திறனை சிறையிலடைத்து விடாமல், கொஞ்சம் நிதானித்துப் பார்ப்போமாக!

தான் வாசிக்கிறதின் பொருள் தெரியாத மந்திரி, பிலிப்பை நோக்கி "..... தீர்க்கதரிசி யாரைக் குறித்துச் சொல்கிறார்? தம்மைக் குறித்தோ வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்". (8 : 34)

இவன் அன்றைய உலகின் வளம் நிறைந்த ஒரு நாட்டின் வரவு செலவுகளைக் கவனித்து, நிதி நிலையச் சீராக வைத்திருக்கும் பொறுப்பில் இருந்த நிதி மந்திரி. உலகக் கல்வியில் தேறினவர்கள்தான் இப்பொறுப்பிற்கு வர முடியும். ஆனாலும், உலகக் கல்வியில் தேறின இந்த மந்திரியால் தேவனுடைய வாக்கியங்களைச் சரியாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில், உலகக் கல்வி தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாக இருக்கிறது. (I கொரி : 1 : 27) . இன்றைக்கும்கூட உலகக் கல்வியில் கொஞ்சம் தேறின சமுதாயத்து மக்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற மமதையில் தேவனுடைய வார்த்தைகளை அற்பமாகவும், தேவ மனிதர்களை துச்சமாகவும் எண்ணுகின்றனர். அன்பரே! உங்கள் உலக ஞானம் தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்து கொள்ள உதவாது என்பதை உணர்ந்து உண்மையான தேவ ஊழியர்களின் ஆலோசனைக்குச் செவி கொடுங்கள். வசனத்தால் தெளிவடையுங்கள்.

மந்திரி கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, பிலிப்பு பேசத் தொடங்கி, "இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" என்று வேத வசனம் கூறுகிறது.

இன்றைக்கு இயேசுவைக் குறித்துப் பிரசங்கியுங்கள் என்று மேடையமைத்துக் கொடுத்தால், வரம் பெற்ற ஊழியர்கள் என தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளும் அநேகர், ஆத்தும இரட்சிப்புக்குத் தேவையானதை விட்டு விட்டு, மற்ற எல்லாவற்றையும் பிரசங்கிப்பர். ஆம்,

இயேசு அன்பானவர் என்பதும், இயேசு இரக்கமுள்ளவர் என்பதும், இயேசு சுகமளிப்பவர் என்பதும், இயேசு கடனைத் தீர்ப்பவர், இயேசு பெண், மாப்பிள்ளை பார்த்துக் கொடுப்பவர், இயேசு தேர்வில் தேற உதவுபவர், மந்திரக் கட்டுகளை எடுப்பவர் என்பதெல்லாம் தான் அவரைப் பற்றிச் செய்யும் பிரசங்கம் என்று பலர் நினைக்கின்றனர். ஆகவே தான், பிரசங்கத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பலன் இந்நாட்களில் கிடைப்பதில்லை. ஆனால், பிலிப்பு இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்ததன் பலன் எப்படியிருந்தது என்பதைக் கீழே கவனியுங்கள்.

இயேசுவைப்பற்றி ஏதுமறியாத மந்திரிக்கு, அவருடைய கன்னிப்பிறப்பு பற்றி அவன் பேசியிருப்பான். ஏனெனில், தேவமைந்தன் பூமிக்கு எப்படி வந்தார் என்பதை விளக்க அது அவசியம். முப்பது வயதில் யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றதையும், தொடர்ந்து ஊழியம் செய்ததையும் குறித்துப் பேசியிருப்பான். இன்னும் தீர்க்கதரிசனங்களின்படியான அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளைக் குறித்துப் பேசியிருப்பான். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினது பற்றியும், அந்நாளில் சபையானது வாக்குத்தத்தத்தின்படி பலத்தோடே ஸ்தாபிக்கப்பட்டது பற்றியும் பேசியிருப்பான். அது மாத்திரமல்ல இயேசுக் கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய, "...நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற். 16 : 15, 16) என்பதையும் தெளிவாகப் பிரசங்கித்திருப்பான். ஆகவே தான், அவர்கள் பிரயாணித்துப் போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தபோது, மந்திரி : " . . . இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்று கேட்டுள்ளான்" (வ. 36) பிலிப்பு மந்திரிக்கு "இயேசுவைப் பற்றி பிரசங்கித்தான்" என்று தான் வேதம் கூறுகிறது. (8: 35) ஆனால், அதில் ஞானஸ்நானம் பூரணமாக அடங்கியிருந்தது என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

இன்று, பெரும்பாலான பிரசங்கிகள், ஞானஸ்நானத்தைக் குறித்து வாயே திறப்பதில்லை. அது அவ்வளவு முக்கியமான விஷயம் அல்ல என எண்ணுகின்றனர். பிரசங்கங்களைக் கேட்கும் பெருமக்களும், ஏன் இவர்கள் ஞானஸ்நானம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறார்கள் அதிலென்ன இருக்கிறது. இயேசுவைக் குறித்துப் பேச எவ்வளவோ இருக்கிறது, அவைகளைப் பற்றிப் பிரசங்கித்தால் போதாதா என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். போதிக்கிறவர்களின் எண்ண ஓட்டமும், கேட்கிறவர்களின் மன நிலையும் எவ்வளவு கேடடைந்துள்ள தென்பதையே இது காட்டுகிறது. ஞானஸ்நானத்தின் அவசியத்தைக் குறித்து எடுத்துரைக்காமல் இயேசுவைக் குறித்துச் செய்யும் பிரசங்கங்கள் அரைகுறையானவை. மற்றும் ஆதாயத்திற்காகவும், கடமைக்காகவும்

செய்யப்படுபவை, முற்றிலும் அர்த்தமற்றவை என்பதில் இனியும் சந்தேகம் வேண்டாம்.

சரி, மேலும் வசனத்தைப் படிக்கும்பொழுது, "அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொன்னதாக உள்ளது." (8 : 37) அதாவது "இயேசுவை தேவனுடைய குமாரனென்று நல்ல அறிக்கை பண்ணியுள்ளான்" இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்வது மிக அவசியமான ஒன்று. பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அதில் பிரியப்படுகிறார்கள். நமதாண்டவர் இதைக் குறித்து சொல்வதைப் பாருங்கள் "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று (மத். 10 : 32, 33)

அப்போஸ்தலன் பவுல், இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போதுகூட", விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்: அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" என்கிறார் (II தீமோத் 6 : 12) தீமோத்தேயு ஞானஸ்நானம் பெற்றபொழுது. "இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்ற நல்ல அறிக்கை செய்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

ஞானஸ்நானம் பெறும் முன் அவரை விசுவாசிப்பது (மாற். 16 : 15, 16) எவ்வளவு முக்கியமோ, விசுவாசித்து மனந்திரும்புவது (அப். 2 : 38) எவ்வளவு முக்கியமோ அதைப்போல அறிக்கையிடுவதும் அவசியம் (ரோமர் 10 : 9,10). இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடாமல் பெறப்படும் ஞானஸ்நானம் சரியானதல்ல வேறு எந்த அறிக்கையும் இதற்கு நிகரானதல்ல. தவறு நடந்திருந்தால், சரியானபடி அறிக்கையிட்டு மீண்டும் ஞானஸ்நானம் பெறுவது மிக மிக அவசியம்.

பிறகு மந்திரி, "இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது ...." என்றுள்ளதை (8 : 38, 39) இங்கே கொஞ்சம் கவனிப்பது அவசியம்.

ஞானஸ்நானம் என்றால் முழுகித்தான் எடுக்க வேண்டுமென்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் தேவையில்லை, நிச்சயமாக மந்திரியின் இரதத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் இருந்திருக்கும், ஏனெனில் நீண்ட பயணத்தின் பெரும்பகுதி வனாந்திர மார்க்கம். ஞானஸ்நானம் என்பது தெளித்தலாகவும் ஊற்றுதலாகவும் இருக்கலாம் என்றால் தேவனால்

அனுப்பப்பட்ட பிலிப்பிற்கு அது நிச்சயமாகத் தெரிந்திருக்கும். தெளித்தோ, ஊற்றியோ ஞானஸ்நானம் கொடுக்க இரதத்திலிருந்த தண்ணீரே போதுமே, இரதத்தைவிட்டு கீழ் இறங்கக்கூடத் தேவையில்லையே! ஏன்? இரதத்தை நிறுத்தக்கூடத் தேவையில்லைதானே!

ஆனால், இவர்கள் இரதத்தை நிறுத்தி, தண்ணீரில் இறங்கினார்கள் - கரையேறினார்களெனில் அதன் பொருள் என்ன? முழுகித்தானே ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டும். ஆகவேதான், அப்போஸ்தலர் பவுல், ரோமாபுரியாருக்கு எழுதும்போது "…. ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்கிறார்.(ரோம. 6 : 4).

இவ்வளவு தெளிவாக தேவனுடைய வார்த்தை இருந்தும், ஏன் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கிறார்களெனத் தெரியவில்லை. அதுவும், பாவமே அறியாத பச்சிளம் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனரே! அன்பரே நண்பரே ஊற்றுதலும், தெளித்தலும் ஞானஸ்நானமே அல்ல. மீறிச் செயல்படுவோமானால் அது துணிகரமான பாவம். தேவனுடைய காரியத்தில் துணிகரமாகச் செயல்பட்டால் நமக்கு ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபம் வந்து சேரும். ஆகவேதான், தாவீது இவ்விதமாகக் கெஞ்சுகிறார். "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும்; அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். (சங். 19 : 13) என்று.

இறுதியாக, "அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (8 : 39) என்றுள்ளது. சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (8 : 39) என்றுள்ளது. சந்தோஷத்தோடே திரும்பிப் போனான் என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

இங்கே, உற்றுக் கவனித்தால் சந்தோஷத்திற்கான உலக மக்களின் மதிப்பீடு முழுத் தவறு என்பது நிச்சயமாய் விளங்கும், பொன்னும், பொருளும், பணமும் பதவியும் ஒரு மனிதனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்க முடியும் என்று உலகம் பலமாய் நம்புகிறது. நாம் பார்த்த இந்த மந்திரிக்கு, பணத்திற்கும், இன்னபிற சௌகரியங்களுக்கும் குறைவேயிருந்திருக்க நியாயமில்லை. இருப்பினும், அவைகள் யாவும் அவனுக்குப் போதுமான சந்தோஷத்தைக் கொடுக்கப் போதுமானதாயிருக்கவில்லை. பாவம் என்ற பாரம் அவனை அழுத்திக் கொண்டிருந்தது. தேவனாலே மாத்திரம் இட்டு நிரப்பக் கூடிய ஓர் இடம் அவனுக்குள் காலியாகவே இருந்துள்ளது.

தன்னுடைய மத காரியங்களை நிறைவேற்ற அவன் மேற்கொண்ட நெடும் பயணம் அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை.

ஆனால், சுவிசேஷகனாகிய பிலிப்புவின் மூலம் பெற்றுக்கொண்ட "ஞானஸ்நானமோ" அவனுடைய எல்லாப் பாவங்களையும் கழுவி, அவனை மெய்யான சந்தோஷத்திற்குள் வழி நடத்தினது. உலகம் தரக் கூடாத, தர முடியாத சந்தோஷத்தை அப்பொழுது அவன் பெற்றுக்கொண்டான்.

மந்திரியின் மனமாற்றத்தை வாசிக்கும் என் அன்பிற்குரிய வாசகரே! நான் நேசிக்கும் நண்பரே! மெய்யான சந்தோஷத்தை உங்கள் வாழ்க்கையில் பெற்று அனுபவித்துக் கொண்டுள்ளீர்களா? அல்லது பணத்தின் மூலமும், பட்டத்தின் மூலமும், பதவியின் மூலம் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பி வீணாக நாட்களைக் கழித்துக் கொண்டுள்ளீர்களா?

எத்தியோப்பிய மந்திரி வாழ்ந்தது முதல் நூற்றாண்டுக் காலம். மந்திரிக்கு கிறிஸ்துவின் வருகை சமீபத்திருந்ததைக் காட்டிலும், 21ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கு இன்னும் சமீபமாக உள்ளது. அப்படியானால், நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள மனமாற்ற சம்பவங்கள். ஏதோ படித்துத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமல்ல. நாம், நம்முடைய நிலையில் தெளிவடைந்து பயன்பெறவே தேவனால் எழுதப்பட்டுள்ளதென்பது நினைவில் இருக்கட்டும்.

இதை வாசிக்கும் சிலாக்கியம் பெற்ற அநேகராகிய நாம், இந்த மந்திரியைப்போல ஒருவேளை பக்தியுள்ள பாவிகளாக இருக்கலாம். பக்தியை ஆசையோடு அரவணைக்கும் நம் தேவன், பாவத்தை அறவே வெறுக்கிறார். அன்று பக்தியுள்ள பாவியாக இருந்த மந்திரியை தேவன் சுவிசேஷகனாகிய பிலிப்புவைக் கொண்டு சந்தித்தார். ஆனால், இன்று தேவ ஆவியால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள பூரணமான வசனங்கள் மூலம் உங்களைச் சந்திக்கிறார். அன்று பக்தியுள்ள பாவியாகிய மந்திரி மனம் மாறி, கீழ்ப்படிந்து, ஞானஸ்நானத்தின் மூலம் தன் பாவங்கள் கழுவப்பட்டு சந்தோஷமாய் வீடு திரும்பினான்.

இன்றைக்கு நாம் எப்படி? வழக்கம்போல் சால் ஜாப்புகளைத்தான் அடுக்கப் போகிறோமா? அநேகராகிய நாம் ஜென்மீகக் காரியங்களில் அதிக நாட்டம் செலுத்தி, ஆன்மீகக் காரியங்களில் கோட்டைவிட்டுக் கொண்டுள்ளோம் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறேன். குறிப்பாக சபைக் கட்டுப்பாடும் பாரம்பரியமும் நம்முடைய மெய்யான சந்தோஷத்திற்கு பெருந்தடையாய் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இருக்கிற தடைகளைத் தகர்த்தெறியுங்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் மந்திரியின் மாதிரியைப் பின்பற்றுங்கள். இவ்வுலக வாழ்க்கையில் மெய்யான சந்தோஷத்தை மாத்திரமல்ல, பரலோக பாக்கியத்தையும் அதன் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்**

# சுவிசேஷத்தை தடைசெய்தல்

சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களும் அதனாலே பிழைப்போ அல்லது சம்பளமோ கிடைக்க வேண்டும் என்பதுக் குறித்து எழுதும்போது, "மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்" (I கொரி : 9 : 12) என்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ஒருபோதும் சுவிசேஷத்திற்கு தடை வருவிக்கவில்லை என்பது உண்மையானாலும், அவரோ அல்லது மற்றவர்களோ அப்படிச் செய்ய முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அது இன்றைக்கும் உண்மையாக இருக்கக் கூடும்.

தவறானவைகளை பிரசங்கித்தும் அதை ஊக்கப்படுத்தியும் வருகிறவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தடையை ஏற்படுத்துகிறார்கள். இப்படிச் சொல்வது உண்மைதான் என்பதை அதன் விளைவை வைத்து எளிதாக கணக்கிடலாம். இதற்கு மாறாக, கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாலும் அதிக தீமை செய்யப்படுகிறது. நாம் எப்படி கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தடையாக இருக்க முடியும் என்பதை சிந்திப்போம்.

1 நாம் மற்றவர்களுக்கு பிரசங்கிக்காமலும், போதிக்காமலும் இருப்பதன் மூலம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தடை செய்கிறோம். சுவிசேஷம் எல்லாருக்குமுடையது. எல்லாரிடத்திலும் அது பிரசங்கிக்கப்பட வேண்டியது. அதற்காகவே நாமும் கிறிஸ்தவர்களானோம். நம்முடைய சகமனிதர்களுக்கு அதை எடுத்துச் சொல்லவேண்டும் என்று நம்முடைய ஆண்டவர் கட்டளை கொடுத்திருக்கிறார் (மாற்கு 16 : 15, 16) இதை நாம் இரண்டு வகையில் செய்யமுடியும். நாம் பிரசங்கிப்பதின் மூலமாகவும், நமது வாழ்க்கையினால் மற்றவர்களுக்கு போதிப்பதின் மூலமாகவும் அப்படிச் செய்ய முடியும். இவ்வகையில் நாம் ஒவ்வொருவரும் கொஞ்சமாவது செய்ய வேண்டும், ஆனால் அநேகர் இவ்விரண்டில் எதையும் செய்வதில்லை. அதாவது, சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு போதிக்க மறுக்கும்போது, அதன் வளர்ச்சியை தடை செய்கிறோம். அது பாவமாகும்.

2 சபை கூடிவரும்போது, நாமும் சபையோட கூடிவரவில்லையென்றால் சுவிசேஷத்திற்கு தடை செய்கிறோம். இது எப்படி இருக்கிறது? மிகவும் எளிதாக இருக்கிறதல்லவா? நாம் ஆராதனைக்கு வரவில்லை என்றால் தேவனை நாம் ஆராதிக்கவில்லை என்பதோடு, கர்த்தரோடு கூட இருப்பதற்கும், அவருக்குள் வளரவேண்டியதற்கான ஆவிக்குரிய போஜனத்தையும் பெற்றுக்கொள்ளவும் தவறுகிறோம். இவைகள் மாத்திரமல்ல, மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கத் தவறுகிறோம். அப்படிச் செய்வதால், சபையாகக் கூடி வருபவர்களுக்கும் நாம் தவறான ஓர் உதாரணத்தை ஏற்படுத்துகிறோம். ஆகவே தான், எபிரேய ஆசிரியர், "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே, மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; நாளானது சமீபத்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பாக்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். (எபி. 10 : 23 – 27).

3 நாம் கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு வளராமலும், தேறாமலும இருப்போமானால் சுவிசேஷத்தை நாம் தடை செய்கிறோம். நாம் ஆவிக்குரிய ரீதியாக பெலவீனர்களாக இருந்தால், நாம் மற்றவர்களுக்கு போதிக்கக்கூடிய நிலையில் இல்லாமல், மற்றவர்கள் நமக்கு போதிக்கும் நிலையில் உள்ளோம். இதைதான் எபிரேய ஆசிரியர், "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடை யவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபி ரெ. 5 : 12–14).

4 நாம் வாழ வேண்டிய விதத்தில் வாழவில்லை என்றால் சுவிசேஷத்திற்கு இடையூறாக இருப்போம். நாம் இப்படிச் செய்வோமானால், கர்த்தருடைய நாமத்திற்கு அவமரியாதையையும், வெட்கத்தையும் கொண்டு வருகிறோம். இந்த உலகம் நம்மைப் பார்த்து, இதுதான் கிறிஸ்தவமென்றால் அது எனக்குத் தேவையில்லை என்று சொல்லிவிடும். நேர்மையான மற்றும் நல்லவர்களை நாம் இடறி விழச் செய்கிறோம். மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு மோசமான மாதிரியை முன் வைக்கிறோம். இவைகள் எல்லாம் தீமையை ஏற்படுத்துகிறது. நாம் கிறிஸ்தவன் என்கிற நாமத்தை மாத்திரம் தரித்துக்கொள்வதில் பிரியப்படுவதில்லை, உண்மையில் நாம் ஒரு கிறிஸ்தவனாக வாழ வேண்டும். நாம் செய்யும் எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே, அவருடைய மகிமைக்கு என்று செய்ய வேண்டும். பவுல் கூறுகையில், "வார்த்தையினாலாவது கிரியையினாலானது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ. 3 : 17) என்கிறார். பேதுரு சொல்லும்போது, "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள், ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக் களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். (I பேதுரு 4:14 - 19).

5 நாம் செய்யவேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும் தட்டிக்கழிக்கும்போது ஆண்டவரின் வேலையை தடை செய்கிறோம்.

சபையிலே அநேக அங்கத்தினர்கள் மோசமானவர்களாகவோ அல்லது ஒழுக்க ரீதியாக கெட்டவர்களாகவோ இருப்பதில்லை. அவர்கள் திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ எந்தத் தவறையோ அல்லது கெட்டதையோ செய்வதில்லை. மற்றவர்கள் அவர்களைப் பார்த்து நல்லவர்கள் என்பார்கள். ஆனால், பிரச்சினை என்னவென்றால், அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வழி விலகி, அவர்கள் செய்யவேண்டிய அநேக காரியங்களை செய்வதில்லை. ஆனால், ஒன்றையும் செய்யாமை, கவனமின்மை, அசட்டைத்தனம் இவை எல்லாம் ஆபத்தானவைகள். அன்றாட வாழ்க்கையில் இது உண்மை என்று நம்மால் உணரமுடியும். இது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பொருந்தும். யாக்கோபு சொல்லுகிறார், "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." (யாக் 1 :22). விசுவாசம் மாத்திரம் போதும் என்று சொல்கிறவர்கள் யாக்கோபு 2-ஆம் அதிகாரத்தை வாசியுங்கள், யாக்கோபு 4 :17, "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்றும் வாசிக்கிறோம். இறுதியாக, "ஆகையால், நாம் கேட்டவைகளைவிட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும். .... தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்! (எபி 2 : 1 – 4).

6 நமது வருமானத்திலிருந்து சரிவர நாம் கொடுக்காமல் இருப்பதின் மூலம் சுவிசேஷத்திற்கு தடையை உண்டாக்குகிறோம். தரித்திரரைத் தாங்குகிறதற்கும், சுவிசேஷப் பிரசங்கியாருக்கு ஊதியம் கொடுப்பதற்கும் சபை, தன் அங்கத்தினர்களையே சார்ந்திருக்கிறது. ஆனால், நாம் சரியாக கொடுப்பதில்லை அப்படி கொடுக்காமலிருப்பதால் சபை காரியங்கள் நின்றுவிடப்போவதில்லை, ஏனெனில் மற்றவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். ஆனால், இப்படிப்பட்ட நிலை இருப்பதால், சபை தன் செயல்பாடுகளை கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆதலால்தான், நாம் கொடுக்காமலிருக்கும்போது, தேவனை திருடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. நாம் அவருக்கென்று கொடுக்கையில்,

அவருடைய வேலைகள் அதிகமாக நடக்கும். ஆகவேதான் பவுல் இப்படிச் சொல்லுகிறார், "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்க கடவன்." (I கொரி : 16 : 2). ஆகவே, நாம் கொடுப்பதை குறைத்துக் கொண்டால் அது ஒருவருக்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் பணியை பாதிக்கிறது. ஆகவே, இவைகளை நாம் நன்றாக சிந்தித்துப் பார்த்து ஆத்துமாக்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால், இதிலே கவனத்துடன் இருப்பது அவசியம்.

நாம் இதுவரை படித்துவைத்ததைப் பார்கையில், அநேக முறை சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கு தடையாக பிரிவினை சபை மக்களையும் மற்றும் மற்ற மதங்களையும் குற்றம் காட்டலாம், ஆனால் அநேக தவறுகள் நமது பாதத்தருகே இருப்பதையும் நாம் காண வேண்டும். மதக் கூட்டங்கள் புதிய ஏற்பாட்டு சத்தியத்தை பரப்புவதற்கு தடையாக இருக்கலாம், ஆனால் நாம் நாமாக இருந்து, கர்த்தருக்கு செய்யவேண்டிய கடமைகளை சரிவரச் செய்தால், நாம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில், உலகம் எங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுவதிலும் யாரும் நம்மை தடை செய்ய முடியாது. ஆனால், நமக்கு தடையாக இருப்பது நமது பெலவீனங்களும், நமது விசுவாசக் குறைச்சலும், நமது பாவங்களும், நமது இருதயத்திலும் வாழ்கையிலும் இருக்கும் நமது சொந்த காரியங்களுமே ஆகும்.

தேவன் தாமே, விசுவாசம், அன்பு, வைராக்கியம், தைரியம், சத்தியத்திற்காக நாம் நிற்கும் திறன், சத்தியத்தின் படி வாழ்வது, இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்லுகிற விஷயம் போன்றவைகளை இன்னும் அதிகமாக தருவாராக. நாம் சுவிசேஷத்தைத் தடை செய்கிறோமோ அல்லது அதற்கு உதவியாக இருக்கிறோமோ!

நாம் இரண்டாவது வகை மக்களாக இருக்க தேவன் உதவுவாராக! ஆமென்.

**J.C. Choate** **J.C. சோட்.**

---

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

பெண்கள் பகுதி

# பொறுப்புள்ள ஸ்திரீ

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு இத்தலைப்பின் கீழ் சில பயனுள்ள செய்திகளை பகிர்ந்து கொள்ள கர்த்தர் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

சாலைகளில் பயணம் செல்லும்போது நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நம்முடைய கடமை. சில விதிகள் நம்மை எச்சரிக்கின்றன. அவ்விதிகளுக்கு ஏற்றாற்போல் பயணித்தால் விபத்தை தவிர்க்கலாம். வாழ்க்கைப் பயணமும் அவ்வாறே உள்ளது. தரை, நீர், ஆகாயம் ஆகிய பயணங்கள் ஒவ்வொன்றும் ஒரு விதிமுறைக்குட்பட்டேயிருக்கிறது. ஒவ்வொரு காரியத்திற்கும் நாமே பொறுப்பாளிகள். சூழ்நிலையோ, மற்றவர்களோ அல்ல. நம்முடைய வாழ்க்கையிலே நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும், தவறுகளுக்கும், தோல்விகளுக்கும், நன்மை களுக்கும் நாம்தான் காரணம்.

வாழ்க்கை பயணத்தில் பச்சை, சிவப்பு நிற விளக்குகள், குறுக்கு சாலைகள், வடிவங்கள், கூர்மையான வளைவுகள், கசப்பான நிகழ்வுகள், இன்னும் பாறைகள், கடினமான பாதைகள், தூசு, மண் இப்படி பலவற்றையும் கடந்து செல்ல வேண்டியயிருந்தாலும் என்னுடைய பிரயாணத்துக்கு நானே பொறுப்பாளி.

நம்முடைய ஆதிப் பெற்றோர்களாகிய ஆதாம், ஏவாளைப் போல பிறர்மீது பழியை போட்டுவிட்டு, நம் குற்றத்திற்காக நம்மை மறைத்துக்கொள்ளக்கூடாது. ஆதி:13:13ம் வசனத்தில், “சர்ப்பம் என்னை வஞ்சித்து, நான் புசித்தேன்” என்கிறாள். 12ஆம் வசனத்தில் வாசிக்கும் பொழுது, “அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்” இங்கே இருவரும் தங்கள் தவறை ஒத்துக் கொள்ளாமல் பிறரைக் காரணம் காட்டுகிறார்கள். நாம் செய்த செயலை காலம் வெளிக்கொணரும். தவறு என்று ஒன்றைச் செய்துவிட்டால் அதற்கு தண்டனை இருக்கவே செய்கிறது. அதை மறந்துவிடக்கூடாது. நம் செயல்களுக்கு நாம்தான் பொறுப்பு. அநேக சமயங்களில் தவறை ஒத்துக்கொள்ளும் பக்குவம் நமக்கு வருவதில்லை. எனவேதான், குடும்பம், சபை, சமுதாயம் ஆகிய இவைகளில் பிரச்சனைகள் வந்து சேருகிறது. குறிப்பாக பெண்களாகிய நாம் பிறர்மீது குற்றம் சுமத்தாமல் பொறுமையோடு பொறுப்புகளை ஏற்று செயல்படுவோமானால் அது நிச்சயம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்துவ குடும்பத்தை உருவாக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

பொறுப்புகளை நம்மேல் ஏற்றுக்கொள்வதென்பது முதிர்ச்சியடைந்த நிலைக்கு ஓர் அடையாளம். பொறுப்பற்றதன்மை முதிர்ச்சியற்ற நிலையை காட்டுகிறது. சிலர் இந்த பொறுப்பான நிலையை சீக்கிரம் எட்டி விடுகின்றனர். சிலர் சற்று காலம்தாழ்த்தி பொறுப்பை அடைகின்றனர். சிலர் பொறுப்பாக நடந்து கொள்வதென்பதை அறியாமலேயே வாழ்க்கையை கழித்துவிடுகின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறுகிறார், "நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போல சிந்தித்தேன். குழந்தையைப்போல யோசித்தேன். நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (I கொரி : 13 : 11).

பிறர் செய்யட்டும் என்று நாம் பொறுப்பற்று இருக்கக்கூடாது. ஏசாயா தீர்க்கனின் அறைகூவலைப் பாருங்கள். "இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" (ஏசாயா: 6:8) என்றார். நாம் தூங்குகிறவர்களாயிராமல் விழித்திருந்து நம் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்" (எபேசி: 5 : 14).

இயற்கையை நான் கவனித்தால் அவைகள் பொறுப்புடன் இருப்பதைக் காணலாம். உதாரணமாக தாவரங்களை எடுத்துக் கொண்டால், அது வேர் ஊன்றி சீக்கிரம் வளரவேண்டும். இல்லாவிட்டால் அது பட்டுப்போகும். நதிகளும் அவ்வாறே பாய்ந்து, தன்னை சார்ந்திருக்கும் மரங்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நதிகளினால் மரங்களுக்கு பயன் இல்லை. இந்த உண்மையை சங்கீதக்காரனாகிய தாவீது முதலாம் சங்கீதத்தில் அருமையாக நமக்கு விளக்கியுள்ளார். கொடியானது செடியில் நிலைத்திருந்தால் தான் கனி கொடுக்கும். இல்லாவிட்டால்கொடாது. இந்த உண்மையை யோவான் 15 : 1-6 வசனப் பகுதிகளில் வாசித்து அறிந்து கொள்கிறோம். இயற்கையே, இவ்வாறு தங்கள், தங்கள் காரியங்களுக்கு தாங்களே பொறுப்பாக இருக்கும்போது நாம் பொறுப்புள்ளவர்களா யிருப்பது அதிக அவசியமானது.

எந்தெந்த வகையில் நாம் பொறுப்புள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று வசன ஆதாரங்களோடு சில கருத்துக்களைப் பார்ப்போம். அன்றாட வாழ்வில்:- ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

**வேதாகமம் சம்பந்தமாக :** ஒருவன் இந்தத் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில்

எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.(வெளி : 22 : 19)

**இரட்சிப்பு :-** ......"மாறுபாடுள்ள இந்த சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்"... அப்: 2 : 40.

**தாலந்துகளை பயன்படுத்துதல் :-** யாரிடம் அதிகம் கொடுக்கப் படுகிறதோ அவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும். (மத் : 25 : 14 – 30).

**தருணங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் :-** ஆகையால், நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம். (கல: 6 : 10).

**சகோதரர்களுக்குள் உறவு :-** பொறுப்பற்ற ஒருவன்தான், காயீனைப் போல இப்படியொரு கேள்வியைக் கேட்கமுடியும்.

.... கர்த்தர் காயீனை நோக்கி : உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன் நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். (ஆதி : 4 : 9).

**அஜாக்கிரதை:** ....... "அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம் பண்ண வேண்டும்". (யாத்: 22 : 6).

**கடன் :** ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் (ரோமர் : 13 : 8).

உடன்படிக்கையை மீறுகிறவர்களாய் இருக்கக்கூடாது. (ரோமர் 1 : 31)

**வார்த்தை :** நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். (பிரசங்கி 5 : 5)

**செயல் :-** ... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். (கலா : 6 : 7).

அன்பான சகோதரிகளே, மேலே பார்த்த வசனங்களை வாசித்து நம் பொறுப்பை அதிகரித்துக் கொண்டால் தேவனுக்கு பிரியமான வாழ்வை இப்பூமியிலே வாழ்ந்து, மறுமையிலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம். கர்த்தர் நமக்கு சுதந்திரமாகக் கொடுத்த நம் பிள்ளைகளுக்கும் இவ்வசன ஆதாரங்களை காட்டி, ஊட்டி வளர்த்தால் அவர்களும் வளர்ந்து ஒரு பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக வாழ அது உதவி செய்யும். எனவே நாம் நம் பொறுப்பை வளர்த்துக் கொள்வோம்.

**RACHEAL RAJANAYAGAM**

# மரணத்திற்கான ஒரு நடனம்

வாலிபர் பகுதி

தலையங்கத்தின் முதல் பதத்தைப் பற்றிய பயமோ, பதற்றமோ, பதபதைப்போ இல்லாத பருவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வாலிபர்களே, மண்ணிலே விதைக்கப்பட்ட விதை, மண்ணெனும் தடை தாண்டி, விண்முட்டி வளர வேண்டுமென்பதற்காக, உரமிட்டு, நீர் பாய்ச்சி, அரும்பாடுபட்டு, வளர்க்கப்படும் செடி, மொட்டுவிட்டு மலர்வதற்கு ஆயத்தமாகும் பருவமாகிய வாலிபப் பருவத்திலிருக்கும் எங்களிடம் இலை உதிர் காலத்தைப் பற்றிப் பேசலாமா எனப் புருவம் உயர்த்தி நீங்கள் கர்ஜனை செய்வது என் காதை துளைத்தாலும், மலரும் மொட்டு மாலை மயங்கி மதி தோன்றும் வேளை வந்தால், வாடி வதங்கி, மண்ணிடம் சேர்ந்து, மக்கிப் போவது இயற்கை என்பதால், மலரும் பருவத்திலேயே உதிரும் நிகழ்வை பற்றி சிந்தித்து, நாம் மானிடராக இருப்பதால், அதற்கு ஆயத்தமாவது அறிவுடையோர் செயலெனக் கருதுகிறேன்.

தன் தந்தைக்கு இளையகுமாரனாகிய தாவீது நம்மிடம் கேள்விக் கணையொன்று தொடுக்கிறார், "மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்?" என்று (சங் 89 : 48). சங்கீதக்காரனின் இக்கேள்விக்கு தயக்கத்தோடு "ஒருவனுமில்லை" என்ற பதிலைத்தான் நாம் கூற வேண்டும். மரணம் ஒருபோதும் தான் வரும் விதத்தைப் பற்றியோ நேரம் பற்றியோ மனிதனோடு பேரம் பேசுவதில்லை. ஆச்சரியமூட்டக் கூடிய அந்த ஆபத்து, நமது புரிந்து கொள்ளுதலுக்கு எட்டாமலிருந்தாலும், நம்மை நிழல்போல் தொடர்கிறது என்பது சூர்யோதயத்தைப்போல் சந்தேகமற்றது. இது உண்மையென நாமறிந்து கொள்ள, கொள்கைக்கு குரல் கொடுத்த உத்தமன், யோவான்ஸ்நானகனை உங்கள் முன் வைக்கிறேன், அவன் உங்களுக்கு தரும் கருத்து நதியில் நானம் பண்ணுவீர்கள் என்ற நம்பிக்கையில்.

**ஏன்? எப்படி?**

சான்றோன் சகரியா, குணசாலி எலிசபெத் என்னும் பக்தியுள்ள தம்பதிக்கு மகனாகப் பிறந்தான் யோவான். இவன் பிறப்பே ஓர் அற்புதப் பிறப்பு, முன்னமே அறிவிக்கப்பட்ட பிறப்பு இவன் தாயின் கருவறையிலிருந்த பத்து திங்கள் இவன் தந்தை அதாவது ஊமையனாக இருந்தான். இவன் வளர்ந்தது வனாந்திரம். காட்டுத்தேனும், வெட்டுக்கிளியும் இவனுக்கு ஆகாரமாக இருந்தது. எருசலேம் நகரத்தார் இவனிடம் சென்று பாவ மன்னிப்புக்காக மனந்திரும்புதலின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள். பழைய ஏற்பாட்டுக் கடைசி தீர்க்கன்

மல்கியாவின் காலத்திலிருந்து நானூறு ஆண்டுகள் கழித்து வானத்தின் குரலாகிய அசரீரி இவன் குரல்வளை மூலமாக ஒலித்தது.

யோவான் வாழ்ந்தபோது ஏரோது, யூதேயா நாட்டை அரசாண்டான், இவன் தன் சகோரனாகிய பிலிப்புவின் மனைவியைத் தன் மனைவியாக்கி தீமை செய்தாலும், வாழ்ந்தான் சுகமாய், நல்லோர் ஆயினும், தீயிலும் தீயோராயினும், அறமெலாம் மறந்தோராயினும் பிறந்த நாள் வருவது வழக்கம்தானே. இதற்கு முன்னமே, ஏரோது செய்த இந்த சட்ட மீறலை திட்டவட்டமாக எடுத்துரைத்தால், கபாலத்தில் குடிகொள்ளாது என்று கருதின யோவான்ஸ் நானகன் அரசனின் இந்த இழி குணத்தை இடித்துரைத்தான் என்பதை நாம் அறிய வேண்டும். இவனின் இச்செயலை, இச்சைக்கடிமையான புதிய பட்டத்தரசி தன் அடிமனதில் மறைத்து வைத்திருந்தாள். தன்னை பழித்தவனை பழிவாங்கும் நேரம் வர காத்திருந்த அவளுக்கு, தக்க தருணமாகிய ஏரோதின் பிறந்த நாள் வந்தது, இதைவிட்டால் மீண்டும் கிட்டாது என எண்ணி சதி வலையின் கடைசி முடிச்சை போட்டாள் (மாற் 6 : 16 – 19).

மகிழ்ச்சியோடு, கேளிக்கையோடு, ஏரோதியாளின் குமாரத்தியின் நடனத்தோடு மரண நாடகம் அரங்கேறியது. மதுவின் மயக்கம் அரியாசனத்தில் அமரும் அரசனின் தலைக்கேறியதால், அவனுக்கு அச்சனம், தன்னை அறியா நிலையாயிற்று. அவன் தலையோ மதுவால் நடனமாடிற்று, இவளும் ஆடினாள், இச்சையும், பொறாமையும் உச்சிக்கேறி எதை வேண்டுமானாலும் கேள், ராஜ்யத்தின் பாதியானாலும் தருவேன் என ஆணையிட்டான் ஆடுகிற அரசிளங்குமரியின் நிமித்தம். அன்னை தனக்கு அன்று சொன்னபடி "யோவானின் தலையை அறுத்துத் தருவீர்" என்றே சாற்றினாள். அவ்விளம் பெண். மன்னன் மனதிலே மயக்கம், போக்கு காட்டி போய்விடவும் முடியாது, ஆகவே இட்ட ஆணை நிறைவேறியது. கொள்கைக்காக நிமிர்ந்து நின்ற அவனின் தலை கொய்து வரப்பட்டது. (மாற் 6 : 19 : 29).

வாலிபர்களே இந்நிகழ்வு நமக்கு பல பாடங்களை கற்றுத் தருகிறது. அவைகளை இப்பொழுது அறிய முற்படுவோம். முதலாவது, இந்தக் கறுப்புக் கம்பளியின் ஊடே நெய்யப்பட்டிருக்கும் பட்டுநூலாகிய, நமது பாடநூல் யாதெனில், நீதியானது, அநீதியை எதிர்க்கும்போது பழிவாங்குதல் பொதுவாக நடக்கிற ஒன்றாக இருக்கிறது.

நீதி எப்பொழுதும் போட்டியின்றி வெல்வதில்லை. யோவானின் வாழ்விலே, அநீதி, அதிகாரத்துடன் இணைந்து ஈவு இரக்கமின்றி செயல்பட்டதைக் காண்கிறோம். அநீதி எதிர்க்கப்படும்போது அது

தூங்கிக் கொண்டோ, ஒன்றும் செய்யாமலோ போவதில்லை, அது நம்மை முழு வெறியோடு தாக்கும் என்பதை நாம் முதலாவது எதிர்பார்க்க வேண்டும். அப்படி அது நம்மை தாக்கும்போது அதை தாங்கிக் கொள்ள நமத மனதை வேத வசனம் என்னும் ஆவியின் பட்டயத்தால் நாம் எதிர்தாக்குதல் செய்ய வேண்டும்.

யோவானின் வாழ்வின் முடிவிலே நடந்த காரியங்களை நாம் கவனிக்கையில், பெலவீனமும், துன்மார்க்கமும் மோதினால் துன்மார்க்கம் வென்றுவிடுகிறது என்பது உண்மை எனப் புலப்படுகிறது. ஏரோது, பெலவீனங்களின் மனிதனாக இருந்ததினால், தன் துன்மார்க்கமான மனைவியின் சக்திக்கு இரையாகி, தான் மன்னனாகயிருந்தும் மக்களுக்கு முன் தரைமட்டும் தலை குனிந்து நிற்கலானான் என்றால் அது மிகையாகாது. நாம் பெலவீனர்களாக இருக்கையில் துன்மார்க்கம் ஜெயித்துவிடும். ஆகவே எனக்கன்பான வாலிபர்களே, ஆவிக்குரிய பெலனை நாம் நாட வேண்டியது மிகவும் அவசியம். ஜெபம், ஆராதனை, திருமறை தியானம், ஆவிக்கு அனல் மூட்டும் முகாம், வசனங்களை மனப்பாடம் செய்தல், இன்னும் பல வகைகளில் நமது ஆவிக்குரிய பெலனை பெருக்கிக் கொள்ள வேண்டும். இது நாம் காணும் கருப்புக் கம்பளத்தில் பிரித்தெடுத்த இரண்டாவது இழையாகிய பெலத்தின் பாடமாகும்.

நாம் காணும் மூன்றாவது முக்கிய பாடம் யாதெனில், இச்சையில் விழுந்து கிடக்கையில், முக்கிய முடிவுகளை எடுத்தால் அது கசப்பான பின் விளைவுகளைத் தரும் என்பதே. ஏரோதின் பிறந்த நாளின் இரவு விளையாட்டுத்தனமான இச்சையில் ஆரம்பித்து, கொலை என்னும் பயங்கரத்தில் முடிந்தது. தன் பிறந்த நாளை கொண்டாட வேண்டிய மன்னன், மதுவின் மயக்கத்திலும், மாதுவின் நடனத்திலும் மயங்கி திண்டாடியதால் தன் வாழ்வில் நீங்கா கசப்பும், ஓர் உன்னத மனிதனின் மரணமும் நிகழ்ந்தது. பாவம் எப்பொழுதும் சுவைப்பதற்கு கசப்பாக இருக்கும் என்று தன்னை காண்பிப்பதில்லை, ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்ததுபோல என்றும் புசிப்புக்கு நல்லதாகவே தோன்றும். ஆனால் அது நம் வாழ்வில் வேர்விடும்போது அழிவையும் அவமானத்தையும் கொண்டுவரும் என்று தெரியவில்லை. ஆனால் இவன் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு, இவர் யோவான்தான் மரித்தோரிலிருந்து எழுந்தார் எனப் புலம்பும் அளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தான் என தெரிகிறது (மாற் 6 : 14 –16)

வாலிபனே! பிறந்த நாமனைவரும் மரிப்பது நிச்சயம், ஆனால், அது எப்படி வரும்? என்று வரும் என்பதுதான் அறியாத ஒன்றாக இருக்கிறது. அது நமது கதவண்டையில் நின்று கொண்டுதான் இருக்கிறது. ஆனால்

அது, கதவை தட்டும் சத்தம் கேட்டால் நாம் தடுமாறிப் போகிறோம். ஆனால், ஒருநாள் அதை முகமுகமாய் சந்தித்தே ஆக வேண்டும். நாம் எப்படி வாழ்கிறோமோ அதைபோல மடிவோம் என்வும் சொல்லமுடியாது. நீதிமானாக வாழ்ந்த யோவான் தலையிழந்துதானே மரித்தான், எல்லாராலும் புகழப்பட்ட ஒருவன் தனிமையிலே விடப்பட்டு மரிக்கவும் வாய்ப்புண்டு, மிகுந்த செல்வந்தர்கள் ஓர் இரவில் தரித்திரர்களாகவும் மாறியிருக்கின்றனர், இந்த மரணத்தினால். ஆகவே எனக்கன்பானவர்களே, வாலிபப்பிராயத்திலேயே நாம் பாதாளத்தின் மற்றும் மரணத்தின் திறவுகோலை தன் கரங்களில் கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்தை அவர் தந்த புதிய ஏற்பாட்டின் மூலம் கேட்டு, அழியா ஜீவன் பெற, அவருக்குள் ஞான்ஸ் நானத்தின் வழியாகப் புகுந்து, வாளால் அறுப்புண்டு மாண்டாலும் விண்ணவரின் மடியிலிருப்போம் என உறுதி செய்து, ஸ்நானகன் காட்டிய வழி செல்வோம் ஜகத்தினை வெல்வோம்!! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

---

## Statement about ownership and other particulars about newspaper Thirumarai Aasaan

1. Place of Publication - Kangayam
2. Perodicity of Publication - Monthly
3. Printer's Name/ Address - S. Kodhandaraman, Konar Printers, 35/4F APK Main Road, Madurai - 12.
4. Nationality - As above
5. Publisher's Name, Address - S. Rajanayagam, 288, Dharapuram Road, Kangayam.
6. Nationality - As above

I,S. Rajanayagam, here by declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 20.03.2004

Signature of Publisher

# 3 பெரிய கேள்விகள்

சிறுவர் பகுதி

சிறு பிள்ளைகளாகிய உங்களுக்கு ஆண்டவரும், மீட்பரு மான இயேசுவின் அன்பான நாமத்தில் இனிதான வாழ்த்துக்கள்.

நீங்கள் இச்சிறு பிராயத்திலிருந்தே தேவனுக்குப் பிரியமாக நடப்பதை பழக்கமாக வைத்திருப்பது உங்களுக்கு ஆசீர் வாதமான காரியம். சரி இந்த மாதம் ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தில் சில பாடங்களை கற்றுக்கொள்ளப் போகிறோம். கற்றுக்கொள்ளலாமா?

நீங்களும், உங்கள் எண்ணங்களும், உங்களுக்கு காரியங்கள் எவ்வாறு போதிக்கப்படுகிறதோ அவ்வாறே இருக்கும். இது உங்களுக்கு பள்ளியிலோ அல்லது ஞாயிறு பள்ளியிலோ எதைப் போதிக்கிறார்களோ அதனடிப்படையிலேயே இருக்கும். இதிலே முக்கியமானது போதிப்பதை அல்லது சொல்லி கொடுப்பவற்றை எவ்வாறு புரிந்து அறிந்து கொண்டுள்ளீர்கள் என்பது தான். அப்படி உங்களுக்கும் போதிக்கப்பட்டது சரியா என்பதை கேள்வி கேட்பதன் மூலம் உறுதி செய்துகொள்ளலாம். நீங்கள் கேட்கும் சில கேள்விகள் அனைவராலும் சில வேளைகளில் கேட்கப் படும். அவை எல்லாராலும் பொதுவாக கேட்கப் படும்

குறைந்தபட்சம் மூன்று கேள்விகள் உண்டு. இந்த மூன்று கேள்விகளை நாம் யோசிப்பதற்கு முன்னதாகவே பரிசுத்த ஆவியானவர் இவற்றுக்கு அவருடைய வார்த்தைகளில் பதிலளித்திருக்கிறார். அந்த மூன்று கேள்விகள்தான் என்ன?

**நான் எங்கிருந்து வந்தேன்?**

இப்பொழுது நீங்கள் இருக்கும் இடத்திற்கு எப்படி வந்தீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா? அநேக மக்களின் கேள்வி இதுதான். வேதாகமம் இதைக் குறித்து என்ன சொல்லுகிறது தெரியுமா? ஆதி 1:1 - 2-ல் வாசிப்போமானால் இந்தப் பூமியிலிருக்கிற யாவும் தேவனுடையது என்று கூறுகிறது. முதலில் ஆதாமையும், ஏவாளையும் படைத்தார். அவர்களுக்கு குழந்தைகள் இருந்தனர். அந்த குழந்தைகளுக்கும் அநேக குழந்தைகள் இருந்தனர். இவ்வாறுதான் காரியங்கள் ஆதி முதல் தோன்றியிருக்கிறது. பெருவெள்ளத்தி னால் உலகை அழித்தபோதும், எட்டுப்

பேரை உயிரோடே வைத்திருந்தார். அந்த எட்டுப்பேரின் பிள்ளைகளின் வழியாகத்தான் நாம் வந்திருக்கிறோம். சரி, இனி அடுத்த கேள்விக்கு வருவோம்.

**நான் ஏன் இங்கு வாழ்கிறேன்?**

நிறைய மக்கள் நினைப்பது என்ன தெரியுமா? நாம் ஏன் இந்தப் பூமியில் வாழ்கிறோம் என்பது தான். அதை நினைத்து குழம்பிப் போயிருக்கிறார்கள். இக்கேள்விக்கான சரியான பதில் (பிர 12 : 13)ல் உள்ளது. அதை எடுத்து வாசியுங்கள். இப்படியாக அது சொல்கிறது. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. சிலர் நினைத்துக் கொண்டிருப்பது என்ன தெரியுமா? தங்களைத் தாங்களே பிரியப்படுத்திக் கொண்டு வாழ்ந்தால் போதும் என்றே நினைக்கிறார்கள். அது உண்மை யல்ல. நாம் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? தேவனுக்குப் பிரியமானதை இச்சிறு பிராயத் திலிருந்தே செய்து, பரலோகத்தை இலட்சியமாக்கிக் கொண்டு வாழ வேண்டும். இதைத்தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் தெரிந்து கொண்டபின் செயல்படுத்த வேண்டும் என்று வேதம் நமக்கு கூறுகிறது. (II பேது 1 : 3, II தீமோ 3 : 16, 17).

**நான் எங்கே போகிறேன்?**

மரித்த பின்பு என்ன நடக்கும் என்பது அனைவருக்கும் ஒரு ஆச்சரியமான காரியமாகவே இருக்கும். மரணம்தான் முடிவு என்பது அறிவுக்கேற்ற ஒரு சிந்தனையாகாது. ஆம், அது ஒரு முடிவல்ல. மாறாக வேதம் நமக்கு என்ன கூறுகிறது? நம்முடைய மரணத்திற்கு பின் நம்முடைய செய்கைகளினிமித்தம் நியாயந்தீர்க்கப்பட்டு பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படுவோம் என்று கூறுகிறது. (எபி 9 : 27, அப் 17 : 31, II கொரி 5 : 10, மத் 25 : 34).

நரகம் என்பது ஒரு பயங்கரமான இடம். கீழ்ப்படியாத ஜனங்களும், தங்களுக்காகவே வாழ்கிறவர்களும்தான் அங்கே இருப்பார்கள் (மத் 25 : 41)

நாம் தேவனுக்கு பிரியமாய் கீழ்படிந்து வாழ்வோமானால் நம் வாழ்க்கையில் வரும் எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும். எனவே, இச்சிறு பிராயத்திலிருந்தே வேத வசனங்கள் சொல்லுகிறபடி அதைச் செய்வோம்.

இப்படிச் செய்யும்பொழுது நமக்கு சந்தோஷமும், சமாதானமும் இவ்வுலக வாழ்வுக்கான ஆசிர்வாதமும் கிடைக்கும்.

**R.A.R NAYAGAM**

# சோதித்தறியுங்கள்

எனக்குப் பிரியமானவர்களே! இத்தலைப்பைப் பார்த்தவுடனே கர்த்தருடைய பந்தியைக் குறித்தே நினைவுக்கு வரும். ஆனால் நாம் இவ்வேளையில் சோதித்து அறியப்போகிறது கர்த்தருடைய பந்தி அல்ல. "நம்முடைய சுயகிரியை" யை சோதித்து அறியப்போகிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையாருக்கு நீங்கள் எல்லாவற்றிலேயும் "கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களை சோதித்தறியும்படி" (II கொரி 2;9) .. என எழுதியிருக்கிறார். ஆக, ஒரு கிறிஸ்தவன் எல்லாவற்றிலும் தன்னைத்தான் சோதித்து அறிய வேண்டியது மிக மிக அவசியமானதாய் காணப்படுகிறது.

ஏன்? ஒரு கிறிஸ்தவன் தன்னைத்தான் சோதித்து அறிய வேண்டும. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்: என (யாக் 3:2) வாசிக்கிறோம். எனவேதான், அவ்வப்பொழுது நம்மை நாமே சோதித்து நம் உள்ளத்தை அறிவது அவசியமாய் இருக்கிறது. அநேக அனுபவங்களைக் கண்ட பரிசுத்தவான்கள். தேவனோடு தனிப்பட்ட நேரம் எடுத்து தங்களைப் பரிசுத்தப்படுத்தி சோதித்து அறிந்து கொள்ளத் தவறவில்லை. "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்" (சங் 139:23-24) என்பது தாவீது ராஜா தேவனிடத்தில் மன்றாடும் ஜெபமாகும். இன்று நமது ஏக்கமும் அதுவாகதான் இருக்க வேண்டும்.

**தேவன் நம்மை சோதித்தறிகிறார் :**

அப்போஸ்தலனாகிய பவுல் அடிகளார், தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபத்தில்!, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். (1 தெச 2:4) என குறிப்பிடுகிறதை பார்க்கிறோம். ஆக தேவன் நம் இருதயங்களை சோதித்து அறிகிறவராயிருக்கிறார். சங்கீதங்களின் புஸ்தகத்தில் .... நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும், உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர் (சங் 7:9) இப்படியாக நம் இருதயத்தின் அனைத்து யோசனைகள், சிந்தனைகளை நம் பிதாவாகிய தேவன் அறிந்தவராயிருக்கிறார். பின்னும் நாம் பார்க்கையில் (ஏரே 11;20 சங் 11:5) வசனத்திலும் இக்காரியங்களை வாசிக்கிறோம். கர்த்தாவே என்னை பரீட்சித்து என்னை சோதித்துப்பாரும் என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும் (சங் 26:2) என தாவீது தன் சங்கீதத்தில் பாடியிருக்கிறார். இங்கு "புடமிட்டுப்பாரும்" என்ற காரியத்தை கவனிப்போமானால் தங்கம், வெள்ளி, போன்றவற்றை

அக்கினியானது சுட்டெரித்து புடமிடுவதைப் போல், நம்முடைய இருதயத்தை புடமிடும்படியாக தேவனிடத்தில் சங்கீதம் வாயிலாக பாடியிருக்கிறார். தங்கம், வெள்ளி புடமிடும் போது அதன் தன்மை, மதிப்பு, தரம் தெரியவரும். மேலும் (சங் 66;10)-ல் "தேவனே எங்களைச் சோதித்தீர்: வெள்ளியை புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர் என்கிறார்.

தேவன் நம்மை சோதித்தறியும் போது நம் இருதயம், சிந்தனைகள் எல்லாம் குற்றமற்றதாகவும், பரிசுத்தமுள்ளதாகவும் இருக்கும்படியாக நம்மை நாமே தகுதியாக வைத்திருக்க வேண்டும்.

**அவசியமான சோதித்தறிதல்:-**

இங்கு அவசியமான சோதித்தறிதல் என்று பார்க்கும்போது "தற்பரிசோதனை" குறித்து நாம் பார்க்க வேண்டும். ஏனென்றால் மற்றவர்களை சோதித்து அறிந்தால் நாம் விசுவாச வாழ்க்கையில் வளர்ச்சி பெற மாட்டோம். நம்முடைய சுயகிரியை, விசுவாசம், பரிசுத்த குணநலன்கள் ஆகியன பற்றி நம்மை நாமே சோதித்தறிந்தால் தவறுகளை திருத்திக் கொள்ள அதிக வாய்ப்புகள் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு தன்னுடைய இரண்டாம் நிருபம் எழுதுகையில், முடிவிலே "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்" (2 கொரி 13:5) என விசுவாசத்தை தட்டி எழுப்புகிறார். எனக்கு பிரியமானவர்களே! இன்று நாம் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் விசுவாச காரியத்தில் எவ்வகையில் ஆயத்தமாயிருக்கிறோம் என்பதை இவ்வசனத்தின் வாயிலாக நம்மை நாம் சீர்தூக்கி பார்க்க வேண்டும். இவ்வசனம் கொரிந்து சபையாருக்கு மாத்திரம் பொருந்தக் கூடியதல்ல இன்று கிறிஸ்துவுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிற நம் ஒவ்வொருவரையும் பார்த்து அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கின்ற ஒன்றாகவே காணப்படுகிறது. மேலும் பவுல் கலாத்திய நாட்டிலுள்ள சபையாருக்கு எழுதுகையில் அவனவன் தன் சுய கிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன் (கலா 6:4). ஒரு மனிதன் தன்னை சோதித்து பார்க்கும்போது மற்றவர்களை பார்த்து குறை சொல்லவோ, கலகம் பண்ணவோ, தவறாக நினைக்கவோ வாய்ப்பில்லை. இங்கு "சுயகிரியை" என்று பார்க்கும்போது தன் சொந்த நடத்தைகள், பேச்சுகள், செய்கைகள், அன்பு செலுத்துவது, உதவி செய்வது, நன்மைகள் செய்வது, போன்ற தான் செய்யும் எல்லா காரியத்தையும் சோதித்து அறிவது.

தன்னையே உய்த்து ஆராய்ந்து பார்க்கும்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த வாழ்வில் மென்மேலும் வளரும் பாக்கியமும் தேவ ஆசிர்வாதமும் கிடைக்கும்.

இப்படியாக கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். (எப 5:10).

**சார்லஸ் எஸ். குணசேகரன்,** கிறிஸ்துவின் சபை, அரக்கோணம்.

## விசுவாசத்தின் அடிப்படைகள்

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உபதேசங்கள் பற்றி கடந்த மாதத்தில் படிக்கத் தொடங்கினோம். இப்பாடத் தொடரை, "பரிசுத்த வேதாகமத்தின் ஏவுதல் மற்றும் அதிகாரம்" என்பதிலிருநது ஆரம்பித்தோம்.

தேவன் சர்வ வல்லமையுடையவராகவும், நித்தியராகவும், நம்மெல்லாரையும் படைத்தவராகவும் உள்ளபடியால், மனுக்குலம் அனைத்தின் மீதும் அதிகாரம் உடையவராய் அவர் மாத்திரம் இருக்கிறார் என கடந்த மாத பாடத்தை முடித்தோம்.

இன்னும், பிதாவானவர் அந்த அதிகாரத்தை இயேசுவுக்குக் கொடுத்தார் என்பதை அறிந்து கொள்ளும் படியான நான்கு வழிகளையும் கண்டோம். முதலாவது, தேவன், இயேசுவுக்குச் செவிகொடுக்கும்படியாகக் கட்டளையிடுகிறார். இரண்டாவது, இயேசுவைக் கண்டவர் களும், கேட்டவர்களும் அவருடைய அதிகாரத்தை அங்கீகரித்தது. மூன்றாவது, இயேசு, பேசின வார்த்தைகளும், உபதேசங்களும், தேவனுடைய வார்த்தைகளாகவும், உபதேசங்களாகவும் இருந்தது என்பது. நான்காவதாக, இயேசுவானவர், பிதாவானவர் கொடுத்த அந்த அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு செயல்பட்டார் என்பது.

இப்பொழுது, அடுத்ததாக, இயேசுவானவர் இந்த பூமியை விட்டுக் கடந்து போகும்போது , அந்த அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார் என்பதை கவனிக்கப் போகிறோம். இன்னும், அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதன் மூலம் அந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கான பெலன் கொடுக்கப்படும் என்று வாக்கு கொடுத்தார்.

இதற்கு முன்பாக, வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும், இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டதென்று மத் 28:18-ல் படித்தோம். அந்த அதிகாரத்தின் அடிப்படையில் கர்த்தர் தன்னுடைய அப்போஸ்தலர்களை, சகல ஜாதிகளையம், சீஷராக்குங்கள் என்று வசனங்கள் 19,20ல் கட்டளையிட்டார். மாற் 16-15ன்படி, அவர்கள் அதை சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் செய்ய

வேண்டியிருந்தது. பிறகு அப்போஸ்தலர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஜனங்களை ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியிருந்தது. பிறகு கர்த்தர், நான் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள் என்று அப்போஸ்தலர் களுக்குச் சொன்னார்.

அடுத்ததாக, தயவு செய்து, யோவான் 16:13ல் இயேசு என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த

ஆவியானவர் அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்கும் வழிநடத்துவார் என இரட்சகர் அறிவித்தார். சத்தியம் என்பது தேவனுடைய வார்த்தைதான் (யோவா 17:17). ஆகவே, இது கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைப் பரிசுத்த ஆவியானவர், தேவனு டைய வார்த்தைகளுக்குள்ளாக வழி நடத்துவார் என்பதே வாக்குத்தத்தம்.

யோவா 14:26-ல் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார் என்று இயேசு சொன்னார். அது மாத்திரமல்ல, இயேசு அவர்களுக்கு போதித்த எல்லாவற்றையும் அவர் நினைப்பூட்டுவார்.

இக்காரியங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு முக்கியமான வசனப்பகுதி அப் 1:8. அங்கே பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வரும் போது அவர்கள் பெலனடைவார்கள் என்று இயேசு அறிவித்தார், அது, அவர்கள் இயேசுவுக்குச் சாட்சிகளாய் இருக்கச்செய்யும். அதாவது, தாங்கள் கண்களால் கண்ட, காதுகளால் கேட்ட காரியங்களுக்கு எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பார்கள்.

அப் 2:1-4 வசனப் பகுதியில், பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மீது வந்தது என்று தேவன் வெளிப்படுத்தியுள்ளார். விசேஷித்த முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட அந்த 12 பேருக்கும், அவர்கள் முன்னொரு போதும் கற்றறியாத பாஷைகளைப் பேசும்படியான திரணியைப் பரிசுத்த ஆவியானவர் தந்தார்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலரும் மற்றும் ஆவியானவரால் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் ( எபே 3:3-50) அந்த அதிகாரத்தை உபயோகித்தார்கள். தேவன், அவர்கள் செய்யும்படியாகச் செய்த அற்புதங்களின் மூலம் சாட்சி பகர்ந்தார். அந்த அற்புதங்களின் மூலம், அவர்களின் செய்தி தேவனிடத்திலிருந்து வந்தது என்று உறுதி செய்தார்.

தயவு செய்து, எபி 2:3-4 ல் இந்த காரியங்கள் தெளிவாக எடுத்துரைக் கப்பட்டிருப்பதை கவனியுங்கள். அங்கே பெரிதான இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறார். அந்த இரட்சிப்பின் மகிமையான செய்தி, முதலாவது

*மூலமாய் உரைக்கப்பட்டது. பிறகு, இது, அவரிடத்தில் கேட்டவர் களாலே, அதாவது, அப்போஸ்தலர்களாலும் மற்றும் ஏவப்பட்ட மற்றவர் களாலும் உறுதி செய்யப்பட்டது. அவப்பட்டு பேசின அந்த தேவ மனிதர் களின் பிரசங்கத்திற்கு தேவன் காட்சி பகர்ந்தார். அதாவது, அவர்கள், தன் னுடைய அதிகாரத்தின்படி தான் பேசுகிறார்கள் என்பதைத் தெளிவு படுத்தினார்.*

அதை, தேவன் எப்படிச் செயதார்? பரிசுத்த ஆவியின் வல்லமை யினாலே அவர்களால் செய்ய முடிந்த அந்புதங்களைக் கொண்டு அதைச் செய்தார்!

இச்செயல்பாட்டின் ஒட்டுமொத்த பலனாக, ஏவப்பட்ட இந்த மனிதர்கள், தேவனுடைய சித்தமாகிய, அவருடைய வார்த்தைகளைப் பேசி எழுதிக் கொடுத்தனர்! இதை தேவன் I கொரி 2:13 ல் பலமாக உறுதிப்படுத்துகிறார். பவுலைப் போன்ற தேவ மனிதர்கள், மனித ஞானத்தின்படியான வார்த்தை களைப் பேசவில்லையென்று தெளிவு படுத்தியிருக்கிறார்கள். மாறாக

இயேசு வாக்களித்தபடி, பரிசுத்த ஆவியானவர் என்னத்தைப் போதித்தார்களோ அதைப் பேசினர்!

தேவ ஆவியால் ஏவப்பட்டுப் பேசின இந்த மனிதர்கள், மனிதனுடைய வார்த்தைகளைப் பேசவில்லையென்று ஜனங்கள் உணர்ந்தார்கள். மறாக, விசுவாசிக்கிறவர்களிடத்தில் பலமாய் கிரியை நடப்பிக்கிற தேவனுடைய வார்த்தைகளைப் பேசினர். உண்மையில், விசேஷமாத் தெரிந்தெடுக்கப் பட்ட இந்த மனிதர்கள் எழுதினவைகள் கர்த்தருடைய கட்டளைக்ளாக இருந்தது (I கொரி 14:37)

ஆவியானவரால் இப்படி ஏவப்பட்ட மனிதர்களைக் கொண்டு வெளிப்படுத்தப்பட்ட, தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேதகாமம் முழுமையானதாகவும், எல்லாவற்றுக்கும் போதுமானதாகவும் இருக்கிறது. இதற்கு மேல் எந்தவொரு வெளிப்பாட்டிற்கும் அவசியமேயில்லை. உண்மையில் அவருடைய வார்த்தைகளாகிய வேதகாமத்தில், அதனோடே கூட்டுதலைக் குறித்தும், குறைத்தலைக் குறித்தும், பல இடங்களில் கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

யோவா 16:13ல், பரிசுத்த ஆவியானவர் அவருடைய அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழி நடத்துவார் என்ற இயேசுவின் வாக்குத்தத்தத்தை நினைத்துப்பாருங்கள். புதிய ஏற்பாட்டில், தேவன், ஜீவனுக்கும், தேவபக்திக்கும் தேவையான எல்லாவற்றையும் தந்தருளியிருக்கிறார்(II பேது 1:3) அந்தப் புதிய ஏற்பாடு, சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணமாயிருக்கிறது. (யாக் 1:25)

யூதா 3 ல் ( முதல் நுற்றாண்டின் முடிவின் போது) " ஒரே விசை" ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம் என்று கூறுகிறார். அதன் பொருள், அது மீண்டும் கொடுக்கப்பட வேண்டியதில்லை. மேலும், ,பிலி 1:27 ல் அந்த விசுவாசம், சுவிசேஷம் என்று செல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் தான் புதிய ஏற்பாடு. ஆகவே, முதல் நூற்றாண்டின் இறுதியில் தேவன், புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தலை நிறைவு செய்தார். அவர் "சகல சத்தியத்தையும்" வெளிப்படுத்திவிட்டார்.

உபாகமம் 4:2 ல் உள்ள தேவனுடைய வல்லமையுள்ள கட்டளையை கவனியுங்கள். அவர் கட்டளையிட்டதற்கும் மாறாக கூட்டுவதை அவர் தடை செய்திருக்கிறார். அதாவது தேவன் அவருடைய வேதாகமத்தில் சொல்லியுள்ளதற்கும் மாறாக எதையும் கூட்டக்கூடாது. அத்தோடு, நமது தேவன் அவருடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துப் போடுவதையும் தடை செய்திருக்கிறார். அதாவது தேவன் அவருடைய வசனத்தில் சொல்லியுள்ளதற்கும் மாறாக, அவைகளை கண்டுக்காமல் நாம், விட்டுவிடவோ அல்லது அதற்கு எதிராகப் போதிக்கவோ கூடாது.

இங்கே ஒன்றை மிக ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். நாம் ஒவ்வொருவரும், "உங்களுடைய தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளும்படியாக" அவருடைய வார்த்தைகளோடு ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது இதையே வேறுவிதமாகச் சொல்வதானால், வேதகாமத்திலிருந்து நாம் ஒன்றையும் கூட்டவும், குறைக்கவும் செய்தால், நாம் அவருக்குக் கீழ்படியாதவர்களாவோம்.

புதிய ஏற்பாட்டின் முடிவிலும், இதே விதமான எச்சரிப்பின் வார்த்தைகள் தேவனிடமிருந்து காணப்படுகிறது (வெளி 22:18,19) எழுதப்பட்டதற்கும் மேலாக ஒருவன் எதையாகிலும் கூட்டினால், இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தைகளை தேவன் கூட்டுவார். இன்னும் இந்த தீர்க்க தரிசன புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளிலிருந்து ஒருவன் எதையாகிலும் எடுத்துப்போட்டால், தேவன் என்ன செய்வார்? ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார். அதாவது, மேலே உள்ள பரலோகத்தில், நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாக தேவன் நம்மை அனுமதிக்க மாட்டார். நம்முடைய அன்பான இரட்சகர், நானும், நீங்களும் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்காவிட்டால், நித்திய ஆக்கினை அடைவோம் என்று கூறியுள்ளார் (மத் 25:46)

ஆகையால், தேவனுடைய வார்த்தையை நாம் எந்த வகையில் மீறினாலும், அது பெரிய காரியமாகவே உள்ளது. நானும், நீங்களும் நித்தியத்தை பரலோக மகிழ்ச்சியில் களிக்க வேண்டுமானால், எக்காரணம் கொண்டும் தேவனுடைய வார்த்தையோடு கூட்டுதலோ குறைத்தலோ இருக்கக்கூடாது.

இப்பொழுது, "நம்முடைய அதிகாரத்திற்கான அளவு கோல்" என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்படியாகக் கற்றுக்கொண்டதைத் தொகுத்துப் பார்ப்போம். அதிகாரம் என்றால் என்ன என்பதற்கு நாம் கீழ்க்கண்ட விளக்கத்தைப் பயன்படுத்தினோம். அதாவது கட்டளை கொடுக்கவும், கீழ்ப்படிதலை வலியுறுத்தவும், நடவடிக்கை எடுக்கவும் அல்லது இறுதித் தீர்ப்புச் செய்யவும்" ஆனது என்று. தேவனிடத்தில்தான் எல்லா அதிகாரமும் உண்டென்று பார்த்தோம். பிதாவானவர் அந்த அதிகாரத்தை இயேசுவுக்குக் கொடுத்தார்.

இயேசு அந்த அதிகாரத்தை, அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் ஏவப்பட்ட மனிதர்களுக்கும் கொடுத்தார். அத்தோடு, அந்த அதிகாரத்தை செயல்படுத்துவதற்கான பெலனை பரிசுத்த ஆவியானவரை அனுப்புவ தன் மூலம் தந்தார். அந்த ஏவப்பட்ட மனிதர்கள் அந்த அதிகாரத்தை செயல்படுத்தினார்கள். தேவன், முதல் நூற்றாண்டில், பரிசுத்த ஆவியி னாலே அவர்கள் அற்புதங்களைச் செய்யும்படியான வல்லமையைத் தந்து அதன் மூலம் அவர்கள் பேசின வார்த்தைகளை ஊறுதி செய்தார்.

இச்செயல்களின் பலன் தான், நம்முடைய கரங்களின் நாம் பெற்றிருக்கும் வேதகாமம். தேவனுடைய வார்த்தைகள் தான், அவருடைய அதிகாரத்தின் அளவுகோல். இது பூரணமானதும், எல்லாவற்றுக்கும் போதுமானதாகவும் உள்ளது. மேலுமாக, எக்காரணம் கொண்டும், இதனோடு ஒன்றைக் கூட்டவோ, இதிலிருந்து ஒன்றைப் போடவோ கூடாது.

"வேதகாமம், தேவனாலே ஏவப்பட்டுக் கொடுக்கப்பட்ட வார்த்தை என்று சொல்லும் போது, அதனுடைய பொருள் என்ன? என்று அடுத்த மாதம் பார்ப்போம். அதுவரைக்கும் , நாம் ஒவ்வொருவரும், அருமையான தேவனுடைய வார்த்தைகளை ஆர்வமுடன் பார்த்து, அதன் படியாக ஒவ்வொரு நாளிலும் வாழ நாம் முயற்சிப்போம்!

**EZSR** **CHARLIE DIPALMA**

# நான் நிற்கும் அஸ்திபாரம் கிறிஸ்துதான்....

இந்தக் கட்டுரையை வாசிக்கிற யாவருக்கும் கன்மலையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துக்கள். நாம் சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்ற விருப்பம் நம் அனைவருக்கும் இருக்கும். ஒரு வேளை நமக்கு சொந்த வீடு கட்ட தேவன் பெலத்தை கொடுப்பார் என்றால் நாம் நல்லமுறையில் வீடு கட்ட பிரயாசப்படுவோம். ஒரு வீடு உறுதியாக நிற்க வேண்டுமானால் வீட்டுக்கு அஸ்திபாரம் உறுதியாக இருக்க வேண்டும். ஏனோதானோவென்று அஸ்திபாரத்தை போடுவோமென்றால் பெரும் மழையோ புயலோ அடிக்கும்போது அந்த வீட்டின் அஸ்திபாரம் சரியில்லாத காரணத்தினால் அது இடிந்து விழுந்து விடும்.

மனிதன் குடியிருக்கிற வீட்டுக்கே இந்த நிலை என்றால் ஆவிக்குரிய ரீதியில் அவனுடைய வீட்டின் அஸ்திபாரம் சரியில்லையென்றால் அவனை அது நித்திய ஆக்கினைக்கு கொண்டு சேர்த்து விடும். அதனால்தான் இயேசு கிறிஸ்து 'கன்மலையின்மேல் உங்கள் வீட்டைக் கட்டுங்கள்' (மத் 7:24) என்று எச்சரிக்கிறார். அவரின் எச்சரிப்பை அலட்சியப்படுத்துவோம் என்றால் நாம் ஆக்கினைக்கு போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

**கன்மலையின் மேல் உங்கள் வீட்டைக் கட்டுங்கள்:-**

இயேசு கிறிஸ்து அறிவுறுத்தும்போது ஒருவனுடைய வீடு நிலைத்து இருக்க வேண்டுமென்றால் அவன் தன் வீட்டை கன்மலையின்மேல் கட்ட வேண்டும் என்கிறார் (மத் 7:24) ஒருவேளை நீங்கள் உங்கள் மனதில் எப்படி கன்மலை மீது ஒருவன் தன் ஆவிக்குரிய வீட்டைக் கட்ட முடியும் என்று எண்ணலாம்.

நாம் வேதாகமத்தில் வாசிக்கும்போது பரலோகத்தின் தேவன் கன்மலையைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்றால் "அந்த கன்மலை கிறிஸ்துவே" (I கொரி 10:4) என்று பரிசுத்த ஆவியானவர் மூலம் விளம்பியிருக்கிறார். அந்த கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது உங்கள் ஆவிக்குரிய வீட்டை கட்ட வேண்டும். ஆவிக்குரிய வீடு என்றால் என்னவென்று உங்கள் மனதிலே தோன்றலாம். தேவன் தம்முடைய

குமாரனை நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுத்து அந்த குமாரனின் இரத்தத்தின் மூலமாக வாங்கப்பட்ட சபையே (அப் 20:28) ஆவிக்குரிய வீடாக இருக்கிறது. இதைக் குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிற போது சபையைக் குறித்து தெளிந்த நீரோடையைப் போல தெளிவாகக் கூறியிருக்கிறார். வரக்கூடிய வசனப் பகுதியை தெளிவாக கண்ணோக்கினால், கற்றுக் கொள்ள முடியும். இயேசு கிறிஸ்து சீஷர்களோடு உரையாடிக் கொண்டு இருக்கும்போது "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்கிறார்கள் என்று கேட்டதற்கு அவருடைய சீஷர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் கூறுகிறார்கள் (மத் 16:14) என்றார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து சீஷர்களை பார்த்து நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டதற்கு அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத் 16:16) என்றான்.

இதைக் கேட்ட நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ்தலனாகிய பேதுருவைப் பார்த்து "யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுரு வாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத் 16:17, 18) என்று கூறினார்.

இயேசு கிறிஸ்து கூறினதை நன்றாக கவனிக்க வேண்டும். "இந்த கல்லின் மீது என்று அவர் தன்னைக் குறித்து கூறுவதையும் நாம் கவனிக்க வேண்டும். கன்மலையாகிய கிறிஸ்து என்ற அந்த கல்லின் மீது அவர் தம்முடைய சபையை கட்டப் போவதாக திட்டமாக கூறுகிறார். அந்த திருச்சபையானது, இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காக மரித்து அடக்கப் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின்பு, பெந்தெகொஸ்தே நாளில் அது எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. அதைக்குறித்து அப் 2ம் அதிகாரத்தில் பார்க்க முடியும்.

கிறிஸ்து கட்டின அந்த சபையானது எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டபோது சுமார் 3000 பேர் இரட்சிக்கப்பட்டு தேவனால் சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப் 2:47) என்று பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தின் மூலம் விளம்புகிறார்.

அந்த சபையைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவிலுள்ள கிறிஸ்துவின் சபைகளுக்கு எழுதும் போது "ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே 2:19-22) என்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் மேலே சொன்ன வசனப் பகுதியில், சபையை தேவனுடைய வீடு என்று எழுதுகிறார். அந்த சபையானது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டு இருக்கிறது என்றும் அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் என்றும் அவர் மேல் சபையானது இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக அஸ்திபாரத்தின் மேல் தான் யாவரும் கட்டப்பட வேண்டும். ஆகவே கிறிஸ்துவாகிய கன்மலை மேல் கட்டப்பட்ட தேவனுடைய வீடாக இருக்கிறது.

இந்த திருச்சபையானது நம்முடைய கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டுள்ளதால் இது கிறிஸ்துவின் நாமத்திலே கிறிஸ்துவின் சபை (ரோம 16:16) என்று அழைக்கப்படுகிறது. பெயரில் மாத்திரம் கிறிஸ்துவை தரித்துக் கொண்டிராமல் உபதேசத்திலும், ஆதி திருச்சபையாகிய கிறிஸ்துவின் சபையின் மாதிரியை பின்பற்ற வேண்டும். ஆதி திருச்சபையார் எப்படி ஆராதனை செய்தார்கள் என்பதை பரிசுத்த ஆவியானவர் "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், (கர்த்தருடைய பந்தி) ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப் 2:42) என்று உறுதிபட கூறுகிறார்.

எனவே கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் அஸ்திபாரத்தை மணலின் மீது கட்டாமல் கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது கட்டியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்துவின் சபைக்கு எழுதும்போது "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவனாலும் கூடாது" (I கொரி 3:11) என்று வைராக்கியத்தோடே எழுதுகிறார். ஆகையால் பிரியமானவர்களே நீங்கள் கலந்து கொள்ளும் சபையின் அஸ்திபாரம் எதன்மீது கட்டப்பட்டு இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். மேலே சொல்லப்பட்டதுபோல கிறிஸ்துவின் சபையிலும் கிறிஸ்துவின் உபதேசத்திலும் அந்த சபையில்லையென்றால் நீங்கள் இன்னமும் மணல்மீதுதான் கட்டப்பட்டு இருக்கிறீர்கள் என்பது உண்மை.


நமது இயேசு கிறிஸ்து நம்மை பார்த்து "நான் சொல்லியபடி இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவன் கன்மலையில் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷருக்கு ஒப்பிடப்படுவான் என்று சொல்லியுள்ளார் (மத் 7:24) கிறிஸ்துவின் சபையிலும், அவருடைய உபதேசத்திலும் கட்டப்படுவீர்கள் என்றால் நியாயத் தீர்ப்பின் நாளிலே நீங்கள் தைரியமாய் அவருடைய சமூகத்தில் நின்று தேவ தூதர்களையும் நியாயந்தீர்த்து பரலோகம் போக முடியும். இதைக் குறித்து நியாயத்தீர்ப்பின் அதிபதி சொல்லும்போது "பெருமழை சொரிந்து பெருவெள்ளம்" வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை ஏனென்றால் அது கன்மலை மேல் அஸ்திபாரம் போடப்பட்டு இருந்தது (மத் 7:25) என்று உறுதிபட கூறுகிறார். ஆகையால் நீங்கள் கன்மலைமேல் கட்டப்படுங்கள் நித்திய காலமாய் நிலைத்திருப்பீர்கள்.

என். பர்னபாஸ், திருப்பூர்

## நன்றி! நன்றி!! நன்றி!!!

கடந்த 15.03.2004 அன்று நடந்த எங்களது எக்லீசியா வேதாகமக் கல்லூரியின் புதிய கட்டிடத்திறப்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைத்து பரிசுத்தவான்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

**ஆசிரியர்..**



# HEAR THE VOICE OF TRUTH

**ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m.<br>6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |

**PLEASE WATCH**

**ETC** Channel Every Sunday

Time : 6.00 to 6.30 a.m.


A Christian Programme in Hindi.

***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***


ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs. 30/-




சிறப்புரை நிகழ்த்தும் சகோ.சார்லி டீ பால்மா (Bro. Charlie Dipalma)



எக்லீசியா கல்லூரிக் கட்டிடத்தின் முகப்புத் தோற்றம்



முகப்புத் தோற்றம் – வேறொரு கோணத்தில்

Published by Church of Christ Kangayam
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S. Rajanayagam